# சுடர் ஒளி

THE SUDAR OLI


සුඩර් ඔළි

13.07.2020 செவ்வாய்க்கிழமை


**புதினம்? தெரியுமோ**

எப்போதுமில்லாதவகையில் இந்தமுறை யாழ்.தேர்தல் மாவட்டத்தில் அதிகமானோர் இறக்குமதி வேட்பாளர்கள். பெரும்பாலும் கொழும்பையே அவர்கள் தளமாகக் கொண்டவர்கள். பூர்வீகம் யாழ்ப்பாணம் என்றாலும், 4

## பொலனறுவையிலிருந்து யாழ். வந்தவருக்கு கொரோனா அறிகுறி!



மருத்துவமனையில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13
யாழ்ப்பாணத்துக்கு தொழில் நிமித்தம் வந்திருந்த பொலன்னறுவையைச் சேர்ந்த ஒருவர் கொரோனா அறிகுறியுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டுள்ளார். எழுவைதீவில் நீர்வழங்கல் வடிகால 2



## வடக்கில் தபால்மூல வாக்களிப்பு சுமுகம்

தவிசாளர் மஹிந்தவும் வருகை

யாழ்ப்பாணம், ஜூலை 13
நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு இன்று ஆரம்பமானது. வடக்கில் தபால் 2

## ஒற்றையாட்சிக்குள் பௌத்தத்துக்கு முன்னுரிமை

*மஹிந்த திட்டவட்டம்*

கொழும்பு, ஜூலை 13
ஒற்றையாட்சிக்குள் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கி ஏனைய மதங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டு அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடனும், சுதந்திரத்துடனும் வாழும் சூழ்நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்படும். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். மொறட்டுவை 2

# அமைச்சுப் பதவி என்ற பேச்சுக்கே இடமில்லை

## தமிழ் அரசுக் கட்சியின் கொள்கை அதுவல்ல என்று சம்பந்தன் இடித்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

புதிய அரசில் அமைச்சுப் பதவி பெறும் எண்ணம் எதுவுமே எம்மிடம் இல்லை. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு அப்படியான கொள்கையே இல்லை. தேர்தல் காலத்தில் அமைச்சுப் பதவி பற்றிப் பேச வேண்டிய அவசியமும் இல்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திட்டவட்டமாக இடித்துரைத்துள்ளார். 2



## வடக்கு மக்களுக்கு முன்னெச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 13
வடமாகாணத்தில் கொரோனா பரம்பல் தற்போது ரணகட்டுப்பாட்டில் உள்ளது என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண 2




## இரண்டாவது சுற்றை கட்டுப்படுத்த பி.சி.ஆர். சோதனையை அதிகரிக்க கோரிக்கை

2

## விபத்தில் ஒருவர் சாவு

வவுனியா, ஜூலை 13
வவுனியா கனகராயன்குளம் குறிசுட்ட குளம் சந்தியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் சாவடைந்துள்ளதுடன், மற்றொரு 4

## வாக்காளர் அட்டைகள் இன்று முதல் விநியோகம்

கொழும்பு, ஜூலை 13
பொதுத் தேர்தலுக்கான உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படுமென பிரதி தபால் மா அதிபர் 2

## தமிழர்களை இந்தியா கைவிட்டு விட்டது

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13
சமஷ்டி தீர்வு திட்டத்தை முழுமையாக கைவிடும்வரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பை அரசு பெறவேகூடாது. அத்துடன், தீர்வு விடயத்தில் 2

## பெண்களின் அரசியல் பிரவேசம் அவசியம் என்பவர்கள் அவர்களை சுயாதீனமாக இயங்க அனுமதிக்கவேண்டும்

*மாமனிதர் ரவிராஜின் மனைவி சசிகலா ஆதங்கம்!*

கொழும்பு, ஜூலை 13
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களின் பெண் வேட்பாளர் என்ற வகையில் கட்சியின் மகளிர் அணி உட்பட சகல பெண்கள் அமைப்புகளின் ஆதரவைக் கோரும் எனக்கு சிலர் தடையை ஏற்படுத்துவது வேதனை அளிக்கிறது. பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை வழங்க முன்வந்த ஒருத்தியை சிலர் சர்வாதிகாரம் சார்ந்த 4

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

## யாழ். வந்தவருக்கு...

மைப்பு சபையின் பணியில் ஈடுபட்டி ருந்த ஒருவரே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் கடந்த சனிக்கிழமையே பொலன்னறுவையிலி ருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தார். கொரோனா அறிகுறிகளுடன் எழுவை தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர், தற்போது அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார். அவரிடம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, இன்று இரவு பரிசோதனை முடிவு வெளியாகும். பரிசோதனை முடிவுகள் வெளியாகும் வரை அவருடன் தொடர்புடையவர்கள் எழுவை தீவில் தனிமைப்படுத்தப்பட் டுள்ளனர். (ஒ,5)

## வடக்கில்...

மூல வாக்களிப்புத் தொடர்பில் எந்த வொரு முறைப்பாடும் பதிவுசெய்யப்ப டவில்லை என்பதுடன், அரச அதிகாரி கள் ஆர்வத்துடன் வாக்களிப்பில் ஈடுபட்டனர். அதேவேளை, தேர்தல் கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு இன்று நேரடியாகப் பயணம் மேற்கொண்டு, மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஆகி யோருடன் கலந்துரையாடினார். (ஒ,5)

## பி.சி.ஆர்....

கொழும்பு, ஜூலை 13

நாட்டில் பி.சி.ஆர். சோதனைக ளின் எண்ணிக்கையை அதிகரிக்கு மாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் சுகாதாரத் துறையினரிடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர். தனிமைப்படுத்தல் நிலையமாக தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் கந்தக்காடு போதைப்பொ ருள் புனர்வாழ்வு நிலையத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையானது தொடர்ச்சி யாக அதிகரித்து செல்கின்றமையை மேற்கோள்காட்டியே இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் நிபுணர்கள் நாளாந்தம் 2 ஆயிரத்து 500 பி.சி.ஆர். சோதனைகளை பரிந்துரைத்தபோ திலும், கடந்த இரண்டு மாதங்க ளாக நாளொன்றுக்கு 500 தொடக் கம் ஆயிரத்து 600 பி.சி.ஆர். சோதனைகள் மாத்திரம் முன்னெ டுக்கப்பட்டு வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் மருத்துவர் ஷேனால் பெர்னாண்டோ சுட்டிக்காட்டி னார்.

அத்துடன் வைரஸ் பரவுவதை முறையாகக் கட்டுப்படுத்துவதற் காக மேலும் பி.சி.ஆர். சோத னைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சகத்தை நாங்கள் வலியுறுத்தி வருகி றோம். ஒரு நாளைக்கு குறைந் தது 5 ஆயிரம் பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்ப டாவிட்டால் வைரஸின் இரண்டாவது அலையை தவிர்க்க முடியாது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார். (ஒ,5)

# அமைச்சுப் பதவி....

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் களமிறங்கியுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், கடந்த 11ஆம் திகதி வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது, அரசியல் தீர்வு கிடைக்க எவ்வளவு காலம் எடுக்குமெனச் சொல்ல முடியாது. அந்த இடைப்பட்ட காலத்தில் நாங்கள் எமது பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வது அத்தியாவசிய தேவை. புதிய ஆட்சி யில் அமைச்சரவையில் சேர்வதாக இருந்தாலும் எந்த அமைச்சுக்கள், எத்தனை அமைச்சுக்கள், என்னவிதமான அதிகாரங்கள் என்பவற்றை பேரம் பேச எமக்குப் பலம் இருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், புதிய அரசில் அமைச்சுப் பதவிகளை கூட்ட மைப்பு பெற்றுக் கொள்ளுமா என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் கேட்டபோது, புதிய அரசில் அமைச்சுப் பதவி பெற்றும் எண்ணம் எதுவுமே எம்மிடம் இல்லை. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு அப்படியான கொள் கையே இல்லை. தேர்தல் காலத்தில் அமைச்சுப் பதவி பற்றிப் பேச வேண்டிய அவசியமும் இல்லை, என்று உறுதியாகப் பதிலளித்தார். (ஒ,5,22)

# தமிழர்களை...

இந்தியாவின் தலையீடும் இனி இருக்காது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலா நிதி குணதாச அமரசேகர தெரிவித் தார்.

பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சியால் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெறமுடியாமல்போகும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை கோருவது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கை யிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:, நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் சமஷ்டித் தீர்வை பெறுவதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலக்காக இருக்கின்றது. எனவே, சமஷ்டியை முழுமையாக கைவிடுகின்றோம் என்று எழுத்துமூல உத்தரவாதத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கினால் ஆதரவைப் பெறலாம். அவ்வாறு இல்லாவிட்டால் எந்த வொரு சந்தர்ப்பத்திலும் ஒத்து ழைப்பை பெறக்கூடாது. சமஷ்டியை எதிர்ப்பதாலேயே ராஜபக்ஷ தரப்புக்கு சிங்கள மக்கள் பேராதரவை வழங்கினர். எனவே, சமஷ்டியை ஏற்கும்தரப்பை இணைத் துக் கொண்டு பயணிப்பது ஏற்புடைய நடவடிக்கையாக அமையாது. அதேவேளை, தீர்வு விடயத்தில் இந்தியாவும் இன்று இவர்கள் (கூட்ட மைப்பு) பக்கம் இல்லை. இது விட யத்தில் அழுத்தங்களை பிரயோ கித்துவந்த அந்நாட்டுக்கும் வெறுத்து போயுள்ளது. அதாவது இந்தியா கைவிட் டுள்ளது என்றே கூறவேண்டும். இனிவரும் காலப்பகுதியிலும் கொவிட் 19 பிரச்சினை, சீனாவுட னான சர்ச்சை தொடர்பிலேயே இந்தியா கூடுதல் கவனம் செலுத்தும். ஆகவே, சமஷ்டியைக் கைவிடும் வகையிலான அரசியல் பயணத் தையே கூட்டமைப்பு தொடரவேண் டும், என்றார். (ஒ,5,44)

## ஒற்றையாட்சிக்குள்...

லுனாவை பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் நேற்று இரவு கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த அரசில் அரசியல் தேவைக ளுக்காக பலவீனப்படுத்தப்பட்டி ருந்த அரச சேவையை குறுகிய காலத்தில் பலப்படுத்தினோம். அரச துறையினர் முன்னெடுக்கும் சேவை கள் பொது மக்கள் மத்தியில் ஏற்றுக் கொள்ள கூடியதாகவும், வினைத்திறன்மிக்கதாகவும் காணப் பட வேண்டும். கொவிட்19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தவும், பொரு ளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கவும் அரச சேவையினர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கி னார்கள்.

நெருக்கடியான நிலையில் குறை வான வசதிகளுடன் அரச ஊழியர் கள் மக்களுக்கான சேவைகளை வினைத்திறனுடன் முன்னெடுத்தார்கள். ஆகவே பல மான அரசு தோற்றம் பெறுவதற்கு அரச ஊழியர்களின் பங்களிப்பு முக்கியமானது. அனைத்து இன மக்களும் சுதந்திரமாகவும், தத்தமது கலாசாரங்களை முழுமையாக பின்பற்றவும் முழுச் சுதந்திரம் உள்ளது. ஒற்றையாட்சி நாட்டுக்குள் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கி ஏனைய மதங்களின் உரிமை கள் பாதுகாத்து அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடன் வாழும் சூழ்நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்ப டும். எமது ஆட்சியில் விகாரை, கோவில், பள்ளிவாசல் மற்றும் தேவா லயம் ஆகியவை மறுசீரமைக்கப்பட் டன. அபிவிருத்தி பணிகளின் போது இனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. நாட்டுக்கே அபிவிருத்தி பணிகள் ஒருமித்த விதத்தில் முன்னெடுக்கப்பட்டன. வடக்கு, தெற்கு என்று வேறுபடுத்தி பார்க்கவில்லை, என்றார். (ஒ,5)

## வடக்கு மக்களுக்கு...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வ ரன், இங்கு இந்நோய் பரவாது இருக்க தேவையான முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன என்று குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நாட்டில் தற்போது நிலவுகின்ற கொரோனா பரம்பல் சூழலில் வட மாகாணத்தில் உள்ள மக்கள் பின்வ ரும் முன்னெச்சரிக்கை நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள் அவசியமற்ற பயணங்களைத் தவிர்த்துக்கொள்ளவும் அல்லது பிற்போடவும்.

அவசியமின்றி பொது இடங்களில் ஒன்றுகூடுவதை தவிர்த்துக்கொள் ளவும். அவசியமற்ற பொது நிகழ்வு கள், விளையாட்டுப்போட்டிகள் என்பவற்றை தவிர்த்துக்கொள்ள வும் அல்லது பிற்போடவும் தற்போது நாட்டில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள் ளது. எனவே பொது இடங்களில் அனைவரும் முகக்கவசம் கட்டா யம் அணிந்து கொள்ளவேண்டும். முகக்கவசம் மூக்கு, வாய் என்ப வற்றை மூடிக்கொள்ளுமாறு அணிந்திருத்தல் அவசியம் முகக் கவசம் அணியாதவர்கள் அனைவ ரும் இரண்டு வாரங்களுக்கு கட்டாய தனிமைப்படுத்தல் முகா மிற்கு அனுப்பி வைக்கப்படுவார் கள். பொது இடங்களில் பொது மக்கள் ஒன்று கூடும்போது 2 பேருக்கு இடையில் ஆகக்குறைந் தது ஒரு மீட்டர் சமூக இடைவெளி பேணப்பட வேண்டும். எந்த நிறு வனங்களுக்கும் உட்செல்ல முன் னர் சவர்க்காரமிட்டு கை கழுவ வேண்டும். அதே போன்று வெளியே சென்று வீட்டுக்குத் திரும்பியவு டனும் சவர்க்காரமிட்டு கை கழுவ வேண்டும்.

தற்போது இந்தியாவில் கொரோனா பரம்பல் தீவிரமாக இருப்பதனால் பலர் இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக இலங்கைக்கு வர முயற் சிக்கின்றனர். இவ்வாறு அடையா ளம் காணப்பட்ட சிலர்; கட்டாய தனிமைப்படுத்தல் முகாம்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்;. வட மாகாணத்தின் கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் இந்தியாவிலிருந்து உங்கள் பிரதே சத்திற்கு சட்டவிரோதமாக யாரா வது வருகை தந்தால் உடனடியாக உங்கள் பிரதேசத்திற்குரிய பொதுச் சுகாதார பரிசோதகர், சுகாதார மருத்துவ அதிகாரி, கிராம அலுவ லர் அல்லது பொலிஸ் உத்தியோ கத்தர் ஆகியோருக்கு தகவல்களை வழங்கி கொரோனா பரம்பலைக் கட்டுப்படுத்த உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம், என்றுள்ளது. (ஒ,5)

## வாக்காளர்....

ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார். சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வாக்காளர்களின் வீடுகளுக்கே வாக்காளர் அட்டைகள் விநியோ கிக்கப்படுவதாகவும் அவர் கூறி யுள்ளார்.

இதற்காக தபால் திணைக்களத்தின் 75 ஆயிரத்துக்கும் அதிகமான உத்தியோகத்தர்கள், கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 29 ஆம் திகதி யின் பின்னர் தபால் ஊழியர்களினூ டாக வாக்காளர் அட்டைகள் விநி யோகிக்கப்பட மாட்டாது என பிரதி தபால் மா அதிபர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

ஆகவே, உரிய காலப்பகுதியில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கள் கிடைக்கப்பெறாதவர்கள், தாம் வசிக்கும் பகுதியிலுள்ள தபால் நிலையத்திற்கு சென்று ஆள் அடை யாளத்தை உறுதிசெய்து அவற்றை பெற்றுக் கொள்ள முடியுமென பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோ கத்திற்கான இரண்டு விசேட தினங் களாக எதிர்வரும் 19 மற்றும் 26 ஆம் திகதிகள், தபால் திணைக்களத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இந்த இரு ஞாயிற்றுக்கிழமைகளி லும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந் நாட்களில் வாக்காளர்கள் தத்தமது வீடுகளில் இருந்து தபால் திணைக்களத்தால் விநியோகிக்கப்படும் உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளை கையொப்பத்துடன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர். (ஒ,5)

# 2ஆவது அலை உருவாகிவிட்டது
# தேர்தலை உடனே பிற்போடவும்!
## ஐக்கிய மக்கள் சக்தியும் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 13
மக்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கி பொதுத் தேர்தலுக்கான திகதியை உடனடியாக ஒத்திவைக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவிடமும், அரசிடமும் ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.
அத்துடன், திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டால், பரப்புரைகளை முன்னெடுப்பதற்கு விதிக்கப்படும் நிபந்தனை ஜனநாயக விரோதச்செயலாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக் காட்டினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் ஏப்ரலில் தேர்தலை நடத்தவேண்டும் என்பதில் அரசு விடாப்பிடியாக இருந்த நிலையில், நாம்தான் தேர்தல் ஆணைக்குழுவுக்குச் சென்று, தேர்தலைப் பிற்போடுமாறு கோரிக்கை விடுத்தோம். 'டீல்' அரசியல் செய்யாது, தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை இல்லையென தெளிவாக சுட்டிக்காட்டினோம். இதனையடுத்தே தேர்தல் திகதி ஒத்திவைக்கப்பட்டது. ஆனால், அரசு அழுத்தங்களைப் பிரயோகித்தது. தேர்தல் ஆணைக்குழு புதிய திகதியை அறிவிக்காவிட்டால், தாமே திகதியை அறிவித்துவிட்டு தேர்தலை நடத்துவதற்கு எத்தனித்தது. இதன் காரணமாகவே ஓகஸ்ட் 5 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என்ற அறிவிப்பை விடுக்கவேண்டிய நிலை தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளது. தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்ட பின்னர், பரப்புரைகளை முன்னெடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கோ அல்லது ஏனைய தரப்புகளுக்கோ நிபந்தனைகளை விதிப்பதற்கு தார்மீக உரிமை கிடையாது. இவ்வாறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டால் எதிரணிக்கே பாதிப்புகள் ஏற்படும். ஏனெனில் எங்களிடம் பண பலம் இல்லை.
எனவே, தேவையற்ற நிபந்தனைகளைக் கொண்டுவரவேண்டாம் என்று ஆணைக்குழுவிடமும், அரசிடமும் வலியுறுத்துகின்றேன். அது ஜனநாயக விரோதச்செயலாகவே அமையும். இரண்டாவது அலை ஏற்பட்டுள்ளது என்பதை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. ஆகவே, மக்கள் மீது அக்கறை இருந்தால் தேர்தலை ஆணைக்குழுவும், அரசும் ஒத்திவைக்கவேண்டும்., என்றார். (ஓ,5,44)

# வாக்களிக்க விடுமுறை வழங்காவிடின் தண்டனை

கொழும்பு, ஜூலை 13
ஓகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ள தமது ஊழியருக்கு, அவர் வாக்களிக்கப் போதியளவு விடுமுறையை தொழில்தருநர் வழங்க வேண்டும்.
விடுமுறைக்கான விண்ணப்பத்தை முன்வைத்தும் விடுமுறை வழங்க தொழில் தருநர் மறுப்பாராயின் அது நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து தண்டனை அளிக்கத்தக்க குற்றம் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
வாக்களிக்க இயலச் செய்யும் வகையில் தமது ஊழியருக்கு தொழில்தருநர் விடுமுறை வழங்க வேண்டும் என்று 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தின் 122 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ,5)

# மும்மொழிக் கற்கை நிலையமும் மூடல்

யாழ்ப்பாணம், ஜூலை 13
வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மும்மொழிக் கற்கை நிலையத்தால் நடத்தப்படும் சகல வகுப்புக்களும் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வரை நடைபெறமாட்டா என்று மும்மொழிக் கற்கை நிலையத்தின் பதில் பணிப்பாளர் பி.எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார்.
எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை முதல் வழமையான நேர அட்டவணைப்படி வகுப்புகள் நடைபெறும் எனவும், மாற்றங்கள் ஏற்படின் அவை பற்றிப் பத்திரிகைகள் வாயிலாக அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ,5)

# பிரிவினைவாதம் பயங்கரவாதமாக மீண்டும் தலைதூக்க முயற்சி
## கமால் குணரத்ன எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 13
நாட்டில் பயங்கரவாதிகளின் ஆயுதப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தாலும் கூட பிரிவினைவாதத்தை முடிவுக்கு கொண்டுவர முடியாது போய் விட்டது. பிரிவினைவாதம் மீண்டும் பயங்கரவாதமாக தலைதூக்க முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது எனவும் அவ்வாறான அடிப்படைவாதிகளின் முயற்சிகளை ஆரம்பத்திலேயே இல்லாது செய்வோம் எனவும் பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.
கொக்காவில் போரின் 30 ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தலைமையில் கொழும்பில் இடம்பெற்றது. இதன்போதே பாதுகாப்புச் செயலாளர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் பாதுகாப்பு குறித்த மிக முக்கிய பொறுப்பை அவர் எண்ணிடம் ஒப்படைத்தார். தேசிய பாதுகாப்பு என்பது பயங்கரவாதிகளிடம் இருந்து நாட்டைப் பாதுகாப்பதோ அல்லது வேறு நாடுகளிடம் இருந்து ஏற்படும் நெருக்கடிகளை கையாள்வதோ மட்டுமல்ல.
இந்த நாட்டில் ஏதேனும் அனர்த்தங்கள் ஏற்படும் வேளைகளிலும், கொவிட் 19 போன்ற நோய் தாக்கங்களில் மக்கள் உயிரிழக்க நேரும் சந்தர்ப்பங்களில் அவ்வாறான நெருக்கடிகளில் இருந்து மக்களையும் நாட்டையும் பாதுகாப்பதும் தேசிய பாதுகாப்பு கடமைகளில் பிரதானமான ஒன்றாகும். கடந்த காலத்தில் எமது இராணுவத்துக்கு உறங்கக் கூட நேரம் இருக்கவில்லை. எமது மக்களைப் பாதுகாக்க வேண்டிய தூக்கமின்றி அவர்கள் கடமை புரிந்தனர். அந்தச் செயற்பாடே எமது வெற்றிக்கு சாதகமாக அமைந்தது. விடுதலைப் புலிகளுடன் நாம் முன்னெடுத்த ஆயுதப் போராட்டம் கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி காலை 10.30 மணியுடன் நந்திக்கடல் எல்லையுடன் முழுமையாக முடிவுக்கு கொண்டுவந்துவிட்டோம்.
பயங்கரவாத ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தாலும் கூட பிரிவினைவாதத்தை முடிவுக்கு கொண்டுவர முடியாது போய்விட்டது. இந்தப் பிரிவினை வாதம் மீண்டும் பயங்கரவாதமாக மாறும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.
எனவே பொறுப்புள்ள இராணுவம் என்ற விதத்தில் இந்த நட்டு மக்களை மீண்டும் அழிவுக்கு கொண்டு செல்லும் பயங்கரவாதத்தை தலைதூக்க முயற்சிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பத்திலேயே தடுக்கும் நடவடிக்கையை நாம் முன்னெடுப்போம்.
இலங்கையில் கடந்த காலங்களில் அடிப்படைவாத சக்திகளின் ஆதிக்கம் அதிகரிக்க ஆரம்பித்து விட்டது. இந்த உலகத்தின் பழமையான மதம் ஒன்றைத் தவறாக கருத்துருகொடுத்து அடிப்படைவாதிகள் சிலர் இந்த நாட்டில் உருவாக்கி எமது மக்களை பலிகொடுக்க நினைக்கின்றனர் என்றால் அதற்கு எதிராக செயற்படுவதும் எமது கடமையாகும். போரில் 28 ஆயிரம் வீரர்களை இழந்து மீட்டெடுத்த எமது நாட்டை மீண்டும் நாசமாக்க இடமளிக்க மாட்டோம்? என்றார். (ஓ,5)

# தே.அ.அட்டை தகவல் கட்டமைப்பை பேணவும்
## உள்நாட்டலுவல்கள் அமைச்சு பிரதேச செயலகங்களுக்கு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 13
தேசிய அடையாள அட்டை இல்லாத 18 வயதுக்கு மேற்பட்ட குடிமக்கள் தொடர்பில் தகவல் கட்டமைப்பை பேணுமாறும், அவர்களுக்கு உடனடியாக தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அனைத்து பிரதேச செயலர்களுக்கும் அறிவித்துள்ளது.
எப்பிரியல் இளைஞர்களுக்கான வலையமைப்பும், இலங்கை இளம் சங்கமும் தாம் இணைந்து வெளிப்படுத்திய தகவல்களை அமைச்சிடம் முன்வைத்து மேற்கொண்;ட கோரிக்கைக்கு அமைய உள்நட்டு அலுவல்கள் அமைச்சு இதற்கான அறிவுறுத்தலை அனைத்து பிரதேச செயலர்களுக்கும் வழங்கியுள்ளது.
67 பிரதேச செயலர் பிரிவுகளில் 18 வயது பூர்த்தியாகியுள்ள 52 ஆயிரத்து 734 பேருக்கு இதுவரையில் தேசிய அடையாள அட்டை கிடைக்கவில்லை என்று தெரியவந்துள்ளதாகவும், மேலும் 264 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை என்றும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.
இலங்கையில் உள்ள 331 பிரதேச செயலகங்களுக்கும் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் தொடர்பில் தகவல்கள் கோரப்பட்ட போதும் 67 பிரதேச செயலகங்களே தகவல்களை வழங்கியிருந்தன. இத்திணைக்களத்தின் உத்தியோகபூர்வ தகவல்கள் மற்றும் பல பிரதேச செயலக பகுதிகளில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ள உத்தியோகபூர்வ மற்ற தகவல்கள் பிரகாரம் இலங்கை முழுதும் தேசிய அடையாள அட்டை இல்லாத 18 வயதுக்கு மேற்பட்ட குடிமக்கள் 5 இலட்சம் பேர் வரை உள்ளனர் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக எப்ரியல் அமைப்பின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இந்த விவகாரத்தில் தகவல்களை வழங்கியுள்ள பிரதேச செயலகங்களின் அடிப்படையில், அடையாள அட்டை இல்லாத 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அதிகமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் வசிக்கின்றமை தெரியவந்துள்ளது. அந்தப் பிரதேச செயலக பிரிவில் 2 ஆயிரத்து 440 பேருக்கு அடையாள அட்டை இல்லை என்று உத்தியோகபூர்வ தகவல்கள் ஊடாக தெரியவந்துள்ளது.
தகவல்களை வெளிப்படுத்தாத பிரதேச செயலக பிரிவுகள் 264 இல், தாம் அடையாள அட்டை இல்லாதவர்கள் தொடர்பில் தகவல் கட்டமைப்பை பேணவில்லை என்று அறிவித்துள்ளன.
இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, அரச நிர்வாகம் மற்றும் ஆள்பதிவுகள் திணைக்களத்துக்கும் கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.
இவ்வாறான நிலையிலேயே தற்போது, தேசிய அடையாள அட்டை இல்லாத 18 வயதுக்கு மேற்பட்ட குடிமக்கள் தொடர்பில் தகவல் கட்டமைப்பொன்றை பேணுமாறும், அவர்களுக்கு உடனடியாக தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள் நாட்டலுவல்கள் அமைச்சு அனைத்து பிரதேச செயலர்களுக்கும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ,5)

## விபத்தில் ஒருவர்...

வர் படுகாயமடைந் துள்ளார்.
மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவர் ஏ9 வீதி குறிசுட்ட குளம் சந்தியில் சென்று கொண்டிருந்த போது எதிரே வருகை தந்த துவிச்சக்கர வண்டியுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றது.
விபத்தில் புதூர் சந்தியைச் சேர்ந்த ஞானசேகரம் (வயது53) சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளதுடன், துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார். விபத்து தொடர்பாக கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஓ,5,110)

# பெண்களின் அரசியல் பிரவேசம்...

போக்குடன் கையாள முற்படுவது வேதனை தரும் விடயமாகும். பெண்கள் அரசியலுக்கு வரவேண்டும் என நினைக்கிறோம்; பெண்களை மதிக்கிறோம் என்று பேசுபவர்கள் உண்மையில் பெண்களை சுயாதீனமாக இயங்க அனுமதிக்க வேண்டும் இவ்வாறு தெரிவித்தார் மாமனிதர் ரவிராஜின் மனைவியும் கூட்டமைப்பின் வேட்பாளருமான சசிகலா.
இது தொடர்பில் அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழரின் அரசியல் ஒற்றுமையை பிரதிபலிக்கும் ஓர் அமைப்பு என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்றே நான் கருதுகிறேன். அந்த ஒற்றுமை என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் இருக்கவேண்டுமென்று வாஞ்சிக்கிறேன். அந்த வகையில்தான் பரப்புரை நிகழ்வுகளில் நான் பங்கேற்கிறேன். நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒன்பது சகோதர வேட்பாளர்களுடனும் சேர்ந்து இயங்கவே விரும்புகிறேன். இது தொடர்பாக கட்சித் தலைமைக்கும் தெரியப்படுத்தியிருந்தேன்.
ஆயினும் நான் பங்கேற்கும் நிகழ்வுகளை விளம்பரமாக்கி நான் தங்களுக்கு மட்டுமே ஆதரவாக பிரச்சாரம் செய்வது போன்ற பிம்பத்தை உருவாக்கி நான் ஏனைய வேட்பாளர்களுடன் பேணும் சுமுகமான உறவை சிதைக்க முயற்சிப்பது ஆரோக்கியமற்ற ஒரு விடயமாகும்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களின் பெண் வேட்பாளர் என்ற வகையில் கட்சியின் மகளிர் அணி உட்பட சகல பெண்கள் அமைப்புகளின் ஆதரவைக் கோரும் எனக்கு சிலர் தடையை ஏற்படுத்துவது வேதனை அளிக்கிறது.
பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை வழங்க முன்வந்த ஒருத்தியை சிலர் சர்வாதிகாரம் சார்ந்த போக்குடன் கையாள முற்படுவது வேதனைதரும் விடயமாகும். இது எனக்கு மட்டுமல்ல என்னைப் பின்தொடர்ந்து வரும் பெண் அரசியல்வாதிகளுக்கும் அச்சுறுத்தலாக அமைந்துவிடக்கூடும். அத்தோடு, எனக்கு ஆதரவு அளிக்க நினைக்கும் பெண்களுக்கும் இது ஒரு சவாலாகக் காணப்படுகிறது.
தமிழ்த் தேசிய நீக்க அரசியலை ஊக்குவிக்கும் முகமாக எந்தக் கூட்டத்திலும் நான் கலந்து கொள்ளவில்லை. தென்மராட்சி எனது மண். நான் அந்த மண்ணில் பிறந்தவள்;. என் மக்களை சுதந்திரமாக சந்தித்துக் கலந்துரையாடுகிறேன். அவர்களின் குறைகளை அறிந்து கொள்கிறேன். அவற்றை நிவர்த்தி செய்ய விரும்புகிறேன். எப்போதும் அப்படியே இருக்க விரும்புகிறேன்.
பெண்கள் அரசியலுக்கு வரவேண்டும் என நினைக்கிறோம்; பெண்களை மதிக்கிறோம் என்று பேசுபவர்கள் உண்மையில் பெண்களை சுயாதீனமாக இயங்க அனுமதிக்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும் என்றுள்ளது. (ம)



# சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தேர்தல் நடவடிக்கை

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13
சுகாதாரத் திணைக்களத்தின் நடைமுறைகளை கட்டாயம் மக்கள் பின்பற்ற வேண்டும். அதனைப் பின்பற்றி தேர்தல் நடவடிக்கைகளை சுயாதீனமாக முன்னெடுக்கவேண்டும்.
இவ்வாறு கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் உறுப்பினரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோகண யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸாருடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் கூறியதாவது:
பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு இணங்க இன்றைய தினம் நாங்கள் வடக்குக்குப் பயணம் மேற்கொண்டுள்ளோம்.
நானும் பொலிஸ் பேச்சாளரும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தேர்தல் திணைக்களத்துடனும் சுகாதார திணைக்களத்துடன் இணைந்து தேர்தலை நடத்துவது தொடர்பில் ஆராய்வதற்காகவே வந்திருக்கின்றோம்.
வடக்கு மாகாணத்திலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தேர்தல் திணைக்களத்துடன் இணைந்து தேர்தல் தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டங்களை இன்று நடத்தவுள்ளோம்.
கொரோனா வைரஸ் தொடர்பிலேயே பிரச்சினை உள்ளது. இது நாடளாவிய ரீதியிலான பிரச்சினை. உலக சுகாதார நிறுவனம் எப்போது கொரோனா இல்லை என்று அறிவிக்கின்றதோ அது வரையில் அது எமக்குப் பிரச்சினைதான்.
இந்த இடருக்கு மத்தியில் எவ்வாறு தேர்தலை நடத்துவது என்பது தொடர்பில் நாம் பல முன்னேற்பாடுகளை தேர்தல்கள் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து மேற்கொண்டுள்ளோம், என்றார். (ஓ5,20)



# கொவிட் – 19 வைரஸ்; தரவுகளில் பலத்த சந்தேகம்!

### ரணில் பகீர் தகவல்

கொவிட் 19 தொடர்பில் சுகாதார அமைச்சால் வெளியிடப்படும் தரவுகள் தொடர்பில் பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளதால், அவற்றை நம்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
கேகாலை பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
கொரோனா வைரஸ் குறித்து ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொற்றுநோய்ப் பிரிவும் பரிசோதனைகளை நடத்திவந்த நிலையில், அங்கு உரிய முறையில் பரிசோதனை நடைபெறுவதில்லை எனக் குறிப்பிட்டு, அந்த பரிசோதனைப் பிரிவை, சுகாதார அமைச்சு நீக்கியது. இலங்கையில் முதற்கட்டமாக கொரோனா வைரஸ் பரவியபோது கடந்த ஏப்ரல் மாதம் எனக்கும், மைத்திரிக்கும் குறித்த பல்கலைக்கழகத்தின் பரிசோதனைப் பிரிவே, கொரோனா பரவியுள்ளதா என பரிசோதனை நடத்தியது. முடிவு வெளியானதும், எனக்கு கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டது. அவர்களின் பரிசோதனை பிழையெனில் எனக்கு நோய் ஏற்பட்டிருக்கவேண்டும். குறிப்பாக ஜிந்துப்பிட்டியவில் இருந்து ஒருவர் அழைத்து வரப்பட்டுள்ளார். அவருக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளது என பல்கலைக்கழகத்தின் பரிசோதனைப் பிரிவு கூறியுள்ளது. அவ்வாறு இல்லை. அவருக்கு வைரஸ் தொற்று ஏற்படவில்லை என பதிவிடுமாறு சுகாதார அமைச்சால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு பல்கலைக்கழகம் உடன்படவில்லை. நான் கூறும் இந்த விடயம் தவறெனில் உரிய விளக்கத்தை வழங்குமாறு சுகாதார அமைச்சிடம் கேட்டுக்கொள்கின்றேன். எண்ணிக்கையைக் குறைத்துக்காட்டுமாறு வலியுறுத்தப்பட்டதாக பல்கலைகழகம் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இது பாரதூரமான விடயமாகும். உலகில் ஏனைய நாடுகள் பரிசோதனைகளை அதிகரித்துவருகின்றன. ஆனால், இங்கு இருந்த பரிசோதனைப் பிரிவையும் அகற்றியுள்ளனர் எனவே, சுகாதார அமைச்சு என்ன செய்கின்றது என்ற வினா எழுகின்றது. குறித்த அமைச்சால் வழங்கப்படும் தரவுகள் சரியானவையா என்பதில் பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது. தரவுகளை ஏற்கமுடியுமா? இன்று மக்கள் அச்சமடைந்துள்ளனர். அந்த அச்சநிலையை மட்டுமே மொட்டு அரசால் உருவாக்கமுடிந்தது- என்றார். (ப-44)

## புதினம் தெரியுமோ?

அவர்களுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளியுண்டு.இருபது, முப்பது வருடங்களாக அவர்கள் கொழும்பிலேயே வசித்து வருவதாலும், ஆடிக்கொருமுறை, அமாவாசைக்கொருமுறையே யாழ்ப்பாணத்தை எட்டிப் பார்ப்பதனாலும், மக்களின் பிரச்சினைகள் என்னவென்பதை அவர்களால் புரிந்து கொள்ளமுடியாது. அதனால் அவர்களிடம் இறங்கிச் சென்று, உங்களின் பிரச்சினையைத் தீர்க்க வாக்களியுங்கள் என அவர்கள் கேட்கமுடியாது. ஏனெனில் அவர்களுக்கு என்ன பிரச்சினை என்று இவர்களுக்குத் தெரியாதே. அப்படியானால் ஏன் இந்த முகம் தெரியாத வேட்பாளர்களை அவர்களது கட்சிகள் களமிறக்கியுள்ளன? காரணம் இருக்கிறது. எப்படியோ முன்பின் முகம்தெரியாத இந்த இறக்குமதி வேட்பாளர்கள் ,கொஞ்சம் பசையுள்ளவர்கள். எப்படித்தான் தலைகீழாக நின்றாலும் தேசியக் கட்சிகளாலோ, சுயேச்சைகளாலோ ஒரு ஆசனத்தையேனும் பெற முடியாது என்று கட்சித்தலைமைகளுக்குத் தெரியும். அதனால் தங்கள் சொந்தப் பணத்தில் தேர்தல் செலவுகளைச் செய்யக்கூடியவர்களை, யாழ்ப்பாணத்துக்கு அந்தக் கட்சிகள் இறக்குமதி செய்துள்ளன.
உண்மை இதுவாக இருக்க, யாழ்ப்பாண மக்களை இரட்சிக்கவே தாம் கொழும்புச் சுகபோகங்களைத் துறந்து தேர்தலில் போட்டியிடுவதாகக் கூட்டங்களில் கூக்குரலிடும் இவர்கள், தேர்தல் முடிவுகள் வரமுன்னரே பின்பக்க புழுதியைத் தட்டிக் கொண்டு பறந்து விடுவார்கள். இறக்குமதிகள் எப்போதும் கானல் நீரே.

– பட்சி

சுற்றறிக்கைகள் ஒன்றுக்கொன்று முரண்:

# தொழிற்சங்க போராட்டத்துக்கு செல்லவேண்டி வரும்

ஆசிரியர் சேவை சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

பாடசாலைக்கு ஆசிரியர்களை அழைப்பது தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் இரண்டு சுற்றறிக்கைகள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றமையால், இதில் எந்த சுற்றறிக்கையை பின்பற்றுவதென ஆசிரியர்கள் நிர்க்கதி நிலைக்கு ஆளாகியுள்ளனர் என்றும் இதுதொடர்பில் முறையான தீர்மானம் எடுக்கத் தவறினால் தொழிற்சங்க போராட்டத்துக்கு செல்ல வேண்டி வரும் என்றும் ஆசிரியர் சேவை சங்கத்தின் மத்திய மாகாண செயலாளர் கமகெதர திஸாநாயக்க தெரிவித்தார்.

ஆசிரியர் சேவை சங்க மத்திய மாகாணக் கிளை நேற்று மாத்தளையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டிருக்கும் சுற்றறிக்கையில் பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகள் இல்லாத ஆசிரியர்களை பாடசாலைக்கு அழைக்கவேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அனைத்து ஆசிரியர்களையும் பாடசாலைக்கு அழைக்க வேண்டும் என மாகாண கல்வித் திணைக்களம் தனது சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளது. இதனால் கற்றல் நடவடிக்கைகள் இல்லாத ஆசிரியர்கள் பாடசாலைக்கு வந்து அவர்களது காலத்தை வீணடிக்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனால் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கவேண்டிய தனிமைப்படுத்தல் சட்டத்தை மீற வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

எனவே மாகாண கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் சுற்றறிக்கையை ரத்துச்செய்ய வேண்டும். இல்லாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்ல வேண்டி ஏற்படும் எனத் தெரிவித்துள்ளார். (ரி3)



## ஸ்கந்தவரோதய மாணவர்களுக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

1989ஆம் ஆண்டு உயர்தரம் கற்று அமரத்துவம் அடைந்த கல்லூரியின் பழைய மாணவர்கள் நினைவாக அதே ஆண்டு உயர்தரம் கற்ற பழைய மாணவர்களால் 25 சைக்கிள்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. அத்துடன் கல்லூரியின் பழைய மாணவி திருமதி.சுதர்சினி தனது மகள் குழலினியின் பிறந்த நாளை முன்னிட்டு தரம்06 மாணவி ஒருவருக்கு சைக்கிள் ஒன்றையும் அன்பளிப்புச் செய்துள்ளார். கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் அதிபர் மு.செல்வஸ்தானின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கல்லூரியின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ரி3-ந)



## பரந்தன் அ.த.கவுக்கு முதலுதவிப் பொருள்கள்

பரந்தன், ஜூலை 13

பரந்தன்,அ.த.க பாடசாலைக்கு பரந்தன் அ.த.க உதவும் உறவுகள் அமைப்பினினால் ஒருதொகுதி முதலுதவிப் பொருள் கள் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றைத் தொடர்ந்து பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள சமூக மேம்பாட்டு அறைக்குத் தேவையான முதலுதவி சம்பந்தப்பட்ட கட்டில், மெத்தை, தலையணை, தலையணை உறைகள், போர்வைகள், துவாய்கள், முதலுதவிப்பெட்டி, மருந்துகள் மற்றும் கையுறைகள் ஆகிய பொருள்களே வழங்கப்பட்டன. (ரி3-222)

## கிளி.குளக்கட்டு ஞான வைரவர் மடப்பள்ளி கட்டடம் திறப்பு

கிளிநொச்சி, ஜூலை 13

கிளிநொச்சி குளக்கட்டு ஞான வைரவர் ஆலய மடப்பள்ளி கட்டடம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் நடைபெற்ற இந்தக் கட்டட திறப்பு விழாவில் மருத்துவர் த.சத்தியமூர்த்தி மற்றும் மக்கள் வங்கியின் முன்னாள் முகாமையாளர் ச.ஸ்ரீகௌரி பாலாவும் இணைந்து நாடா வெட்டி மடப்பள்ளியைத் திறந்து வைத்தார்கள். மேலும் நினைவுக்கல்லை கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலய அறங்காவலர் சபையின் தலைவர் ந. செல்வராசா திரை நீக்கம் செய்து வைத்தார். (ரி3-222)






## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

முல்லைத்தீவு, ஜூலை 13

சுசிலன் பவுன்டேசன் நிறுவனத்தால் முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சுவிஸில் வசித்துவரும் திரு திருமதி .பொன்னம்பலம் யோகராணி தம்பதிகளின் 40வது திருமண நிறைவு வருடத்தைச் சிறப்பிக்கும் முகமாக 9500 ரூபா பெறுமதியான 18 மாணவர்களுக்கு நேற்றையதினம் இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கிப்பட்டுள்ளன. (ரி3-222)






யாழ்ப்பாணம் நீர்வேலி சவாரித்திடலில் நேற்றைய தினம் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டுவண்டி சவாரிப் போட்டி இடம் பெற்றது. இப் போட்டியில் பெருமளவான இளைஞர்கள் தமது காளைகளுடன் பங்குபற்றியதோடு, பெருந்திரளான பார்வையாளர்களும் பங்கேற்றிருந்தனர். (ரி3)

# ஆயுதப்போரின் தொடர்ச்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் இப்படித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

ஆயுதப் போராட்டத்தின் தொடர்ச்சியான ஜனநாயக வடிவம்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அடிநுனி தெரியா மல் எம்மை விமர்சிப்பவர்கள் இதை உணர வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பா ளர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போராட்ட வரலாறு தெரியாத பலர் இன்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய தலைவர் பிரபாகரனின் பெயரை ஏலம் போட்டு விற்கின்றனர். சிலர் உரிமை கொண்டாடுகின்ற னர். மறுபக்கம் சிலர் அவரால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பை அழித்தே தீரு



வோம் என கங்கணம் கட்டிக் கொண்டு அலைகின்றனர். இது பகல் கனவு. இவர்களை நம்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகப் போடப்படும் ஒவ் வொரு வாக்கும் பேரினவாத ராஜபக்ஷ குடும்பத்துக்குப் போடும் வாக்காகவே அமையும். தமிழ்த் தேசியம், தமிழ்த் தேசியம் என்று கூறிக்கொண்டே சிங்களப் பேரினவாதிகளுக்கு முண்டு கொடுக்க முனைகின்றனர்.

அன்று முதல் இன்றும் என்றும் நம் மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதும் போராட்டங்களை நடத்துவதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுதான். நாம் மேடைகளில் மட்டும் வாய்ப்பந் தல் போடுபவர்கள் அல்லர். நமது தலைவர்கள் செய்த தியாகங்களை மக்கள் மறந்துவிடவில்லை. அதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்கின்ற னர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனக்கோ அல்லது தனிப்பட்ட ஒருவருக்கோ சொந்தமானது அல்ல. தியாக சிந்தையுடன் மக்களால் கட்டி எழுப்பப்பட்ட கட்சி. இது சுயநலவாதக் கும்பல் களால் சிதைந்துவிடக் கூடாது.

தமிழர் தாயகத்தைப் பாதுகாத்து எமது உரிமைகளை வென்றெடுக் கக் கூடிய ஒரே அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்று தான். உங்களின் பாதுகாவலனாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து உங்கள் வீட்டையும் எமது தமிழ் தேசத்தையும் பாதுகாக்க அணிதிரளுங்கள் - என்றார். (ம)

# இறைச்சிக் குவியலாக மனித உடல்கள்

## நவாலி தாக்குதல் தொடர்பில் இமானுவேல் அடிகள்

யாழ் போதனா வைத்தியசாலையில் இறைச்சி குவிக்கப்பட்டிருந்தது போல மனித உடல்கள் குவிக்கப்பட்டிருந்த காட்சியை என்றுமே என்னால் முடியாது. அந்நாளை ஓர் உயர் அமுக் கத்தை கொண்ட நாளாக நான் உணர்ந் தேன். அன்றைய தினம் லண்டன் பி.பி. சி. மற்றும் புலிகளின் குரல் செய்தி களை மறுகணம் கேட்டதும் எனது மனக்கண் முன்னால் இன்றும் உள்ளது என்று பெரியகுரு மட அதிபரும் ஓய்வுபெற்ற குருவுமான எஸ்.ஜே. இம் மனுவேல் அடிகளார் தெரிவித்துள்ளார்.

நவாலி சென். பீற்றர்ஸ் தாக்குலின் 25 ஆம் ஆண்டு நினைவு தின திருப்பலி யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் பி. ஜெ.ஜெபரட்ணம் தலைமையில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே குரு மட அதிபர் எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது தொடர்பில் சிறப்பு நூல் ஒன்று எழுத்தாளர் நாவண்ணனால் முதலாம் நினைவாண்டு தொகுப்பாக வெளியி டப்பட்டது. இதனைத் தொடர்ந்து நாகர்கோவிலில் 28 பேர் படுகொலை, செம்மணியில் 38 பேர் படுகொலை மட்டுமல்ல நவாலியிலும் மிகப்பெரிய மனித படுகொலை இடம்பெற்றது. இப் படுகொலை தொடர்பாக அன் றைய அரசு பல்வேறு மூடி மறைப்புக் களை மேற்கொண்டதுடன் அன்றைய வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த லக்ஸ்மன் கதிர்காமரும் இச் சம்பவம் நவாலியில் இடம்பெறவில் லையென வெளிநாடுகளுக்கு கோடிட்டு காட்டியமை எமது இனத்திற்கு வெறுப் பாகவும் மிகக் கவலையாகவும் இருந்தன.

ஆனால் தாக்குதல் இடம்பெற்றபோது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க இன்று குறித்த தாக்குதல் தற்செயலாக இடம் பெற்ற விடயம் என்றும், மக்களிடம் அன்றைய நிகழ்வுக்காக மன்னிப்புக் கோருகின்றேன் எனவும் கூறியுள்ளமை எமக்கு ஆறுதல் அளிக்கிறது. எனினும் இழப்பின் உயிர் பெறுமதிக்கு இன்று வரை இழப்பேதும் வழங்காத நிலை யும் அழிவடைந்த சொத்துகளுக்கு நஸ்டஈடு வழங்காததும் ஒருவிதமான கவலைக்கிடமான நிலையை ஏற்படுத் தியுள்ளது. அது மறக்கமுடியாதது. எனினும் எதிர்காலத்தில் மாற்றம் வேண் டும் எனவும் தெரிவித்துள்ளார். (ரி3-50)



# கிளிநொச்சியில் வெடிபொருள்கள் மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 13

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் மற்றும் சுண்டிக்குளம் நாதன் திட்டம் பகுதிகளில் நேற்றையதினம் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த வெடிபொ ருள்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற அனுமதியுடன் பொலிஸ் அதிரடிப் படையினரால் செயலிழக்கச்செய் யப்பட்டன. (ரி3-113)

# வாழ்வாதார உதவித் திட்டங்கள்

கிளிநொச்சி, ஜூலை 13

டெப்லிங் பணியகத்தினால் உருவாக்கப் பட்ட இயலாமையுடன் கூடிய நபர் களை உள்ளடக்கிய சுய உதவிக் குழுக்க ளுக்கான வாழ்வாதாரத் திட்டம் வழங் கும் நிகழ்வு CBM இன் நிதி அனுசரணை யுடன் அண்மையில் ஸ்கந்தபுரத்தில் இடம்பெற்றது.

ஸ்கந்தபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட வெண்ணிலா சுய உதவிக்குழுவுக்கு ரூபா 145,000 பெறுமதியான தேங்காய் எண் ணெய் உற்பத்தி செய்யும் இயந்திரமும், கோணாவில் பகுதியில் உருவாக்கப்பட்ட விடிவெள்ளி சுய உதவிக்குழுவுக்கு ரூபா 100,000 பெறுமதியான கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரமும் வழங்கப்பட் டுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் செயலாளர் அருட்திரு கிங்ஸிலி வீரசிங்க கலந்து கொண்டார். டெப்லிங் பணி யகத்தின் பிரதம இணைப்பாளர் அருட்.திரு. அன்ரனி சதீஸ், அருட்.திரு.சசிக்குமார், அருட்.திரு.அருன் ஆகியோரும் நிகழ் வில் கலந்து சிறப்பித்தனர். (ரி3-214)



# கழிவுத் தேயிலையுடன் இருவர் கைது

கொழும்பு, ஜூலை 13

சீதுவகொட்டுகொட பிரதே சத் தில் களஞ்சியசாலையில் வைக் கப்பட்டிருந்த 700 கிலோகிராம் கழிவுத் தேயிலையுடன் இரண்டு நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள னர்.


நேற்று பிற்பகல் மேற்கொள்ளப் பட்ட சோதனை நடவடிக்கை யின் போது, பாவனைக்கு உத வாத தேயிலையை பொதியிடும் போது அவர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகிறது. ராகம மற்றும் ஜாஎல பகுதி களில் வசிக்கும் 45 மற்றும் 51 வயதுடைய நபர்களே இவ் வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ரி1)

# உனவட்டுன ரயில் நிலையம் மூடல்

கொழும்பு, ஜூலை 13

காலி, ஹபராதுவ பகுதியில் அடை யாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளருடன் உனவட்டுன ரயில் நிலைய அதிபர் தொடர்பு களை பேணியுள்ளமையால் உன வட்டுன ரயில் நிலையம் இன்று தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

ரயில் நிலைய அதிபர் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள் ளதுடன், அவரை 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுமா



றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள் ளது. அதேவேளை உனவட்டுன ரயில் நிலையத்திற்கான கிருமி நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வுள்ளதுடன், பதில் ரயில் அதிபரை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாக ரயில்வே திணைக் களம் தெரிவித்துள்ளது. (ரி1)



# வவு.பொது வைத்தியசாலையில் வரிசையில் காத்திருந்த நோயாளர்கள்



வவுனியா, ஜூலை 13

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா நோய்த் தொற்று காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

இன்றையதினம் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு வருகைதந்த நோயாளர்கள், வெளிநோயாளர் பிரிவில் இருக்கைகள் உள்ளபோதிலும் கடும் வெயிலுக்கு மத்தியில் வரிசையில் நின்று சேவைகளைப் பெற்றமையினை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. சுகவீனம் காரணமாக வைத்தியசாலைக்கு வருகைதரும் நோயாளர்களை வைத்தியசாலை சமூகத்தினர் கடும் வெயிலில் வரிசையில் நிற்க வைத்திருந்தமை மனவேதனையளிக்கும் விடயம் எனவும் நோயாளர்களின் நலனை கருத்திற்கொண்டு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (ரி3-18)

# தங்காலையில் கொரோனா தொற்றாளர் அடையாளம்

கொழும்பு, ஜூலை 13

கொரோனாத் தொற்றுக்குள்ளான நபர் ஒருவர் தங்காலை பட்டிபொல பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்த நபர் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றியவர் என காலி சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். இந்த நிலையில் அவருக்கு நெருக்கமாகச் செயற்பட்ட உறவினர்கள் உட்பட 7 பேரும், வர்த்தக நிலையங்கள் இரண்டின் உரிமையாளர்கள் உட்பட 12 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர் கடந்த 5 ஆம் திகதி தங்காலையில் உள்ள அவரது வீட்டுக்கு விடுமுறையில் வந்துள்ளார். அவர் பல நாள்களாக நகரின் பல இடங்களுக்குச் சென்றுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இதன் காரணமாக அவர் பயணம் செய்த இடங்களில் இருந்த நபர்களை கண்டுபிடித்து தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ரி2)

# மேதானந்த தேரரின் கருத்து கண்டிக்கத்தக்கது

## சுதந்திரக்கட்சி வேட்பாளர் பவதாரணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

ஆலயங்கள் குறித்த ஜனாதிபதி செயலணி உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரரின் கருத்து கண்டிக்கத்தக்கது என ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட் பாளர் பவதாரணி ராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழர்களாகிய நாம் எமது அடையாளங்களை விட்டுக்கொடுக்க தேவையில்லை. எமது வரலாற்றுத் தடங்களையோ கலாசார அம்சங்களையோ இன்னொருவர் மறுப்பதென்பது ஏற்கமுடியாதது. அந்தவகையில் எமது ஆலயங்கள் குறித்த ஜனாதிபதி செயலணி உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரரின் கருத்து கண்டிக்கத்தக்கது. ஆனால் குறித்த நூல் எழுதப்பட்டு இன்று காலம் கடந்துவிட்ட நிலையில் தூசு தட்டிப்பார்க்கப்படுவதும் அரசியல் சாணக்கியத்தனம் என்பது எனது கருத்து. இது குறித்த ஜனாதிபதியின் கருத்தும் கவனிக்கவேண்டும். செயலணி உறுப்பினர்களின் தனிப்பட்ட கருத்துக்களை செயலணியின் கருத்துக்களாக நாம் கருதவேண்டியதில்லை என்றும் அவற்றை தவிர்க்கும்படியும் குறிப்பிட்டு இருந்தமை கவனிக்கத்தக்கது.

தமிழ் மக்களின் கட்சிகள் வேறுபடலாம், களங்கள் வேறுபட்டிருக்கலாம் ஆனால் காணவிரும்பும் காட்சியும் எண்ணங்களும் பொதுவானவை என்பதில் மாற்றுக்கருத்தில்லை. வேற்றுமைகள் இருக்கட்டும் நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டியது காலத்தின் தேவை எனத் தெரிவித்துள்ளார். (ரி1)

# வவுனியாவில் வீரமக்கள் தினம்

வவுனியா, ஜூலை 13

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் 31வது வீரமக்கள் தினம் வவுனியா கோயில்குளத்தில் அமைந்துள்ள க.உமாமகேஸ்வரன் நினைவில்லத்தில் இன்று காலை 9.30 மணியளவில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இந் நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அரசியல் கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரும் வவுனியா நகரசபை உறுப்பினருமான சந்திரகுலசிங்கம் (மோகன்) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில். கழகத்தின் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டதுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக தோழர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (ரி3-110)





சுழிபுரத்தில்

# கஞ்சா மூடைகளுடன் இருவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூலை 13

கஞ்சா மூடைகளை துவிச்சக்கரவண்டியில் எடுத்துச்சென்ற இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என வட்டுக் கோட்டை பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸ் புலனாய்வுத்துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சுழிபுரம் மேற்கில் சந்தேகத்துக்கிடமான முறையில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த இருவரை பொலிஸார் மறித்து சோதனை மேற்கொண்டபோதே அவர்களிடமிருந்து 124 கிலோ நிறையுடைய 2 மூடை கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் சுழிபுரம் தெற்குப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் மேலதிக விசாரணைகள் நடந்து வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3-25)

# மேல் மாகாணத்தில் 993 பேர் கைது



கொழும்பு, ஜூலை 13

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கையில் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 993 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 80 பேர் விரல் ரேகையை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் மேல் மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி1)





முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வு, வலிகாமம் மேற்குப் பிரதேச சபை யில் இன்று இடம்பெற்றது. (சு)

# போலித் தகவல்களை பரப்பினால் கடுமையான சட்ட நடவடிக்கை



## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 13

போலித் தகவல்களை பரப்பும் நபர்களுக்கு எதிராக கடுமையாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என, பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அரச ஊழியர்களுக்கு தொடர் விடுமுறை என பரவிய போலி தகவல் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளிகள் தொடர்பில் போலியான தகவல்கள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன.

சமூக வலைத்தளம் ஊடாக பல்வேறு போலித் தகவல்களைப் பரப்பும் நபர்கள் தொடர்பில் குற்ற விசாரணை திணைக்களம் தீவிரமாக கண்காணித்து வருகிறது.

கொரோனா தடுப்பு மையம் மற்றும் அரச தகவல் திணைக்களத்தினால் வெளியிடும் தகவல்களை மாத்திரம் நம்புமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி1)

## 'என் உயிரைக் காப்பாற்றுங்கள்'

### குவைத்திலிருந்து பெண்ணின் கதறல்

கொழும்பு, ஜூலை 13

குவைத் நாட்டில் சிக்கியுள்ள இலங்கை பெண்ணொருவர்,தனது உயிரைக் காப்பாற்றுமாறு காணொலி தொலைபேசி அழைப்பின் மூலம் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குவைத் நாட்டில் வீட்டுப் பணிப்பெண்ணாக தொழில் புரிந்து வரும் இந்தப் பெண்ணுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. என்றும் இந்தப் பெண் தொழில் புரியும் வீட்டின் உரிமையாளர்கள், பெண்ணுக்கு சிகிச்சையளிக்க ஏற்பாடுகளை செய்யாது கொடுமைப்படுத்துகின்றனர் என்றும் அந்தப் பெண் அழுதவாறு கூறியுள்ளார்.

மேலும் தன்னை அடைத்து வைத்து கொடுமைப்படுத்துகின்றனர் எனவும் மயக்கம் ஏற்படுவது போல் உணர்கிறேன் எனவும் தான் இறக்கும் முன்னர் தன்னைக் காப்பாற்றுமாறும் தனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர் என்றும் அந்தப் பெண் காணொலியில் தெரி வித்துள்ளார். (ரி1)

## கந்தகாடு சென்றவர்களைத் தேடி புலனாய்வுப் பிரிவினர் வலை வீச்சு

கொழும்பு, ஜூலை 13

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்தும் கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் இருந்தவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள், அவர்களை பார்க்க சென்ற காலி மாவட்டத்தை சேர்ந்தவர்களை கண்டுபிடிக்க பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மாவட்டம் முழுவதும் தேடுதல்களை நடத்தி வருகின்றனர். புனர்வாழ்வு முகாமில் இருந்தவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலி மற்றும் எல்பிட்டிய பொலிஸ் பிரிவுகளை சேர்ந்த போதைப் பொருளுக்கு அடிமையான சுமார் 600 பேர் நீதிமன்றத்தின் மூலம் கந்தகாடு புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.


இவர்களை பார்க்க சென்றிருந்த நபர்களின் தகவல்களை கண்டறிய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் இந்த தேடுதலை நடத்தி வருகின்றனர். (ரி1)

### உலகம் முழுவதும்

## ஒரே நாளில் 2 லட்சம் பேருக்குத் தொற்று

சர்வதேச ரீதியில் கடந்த 24 மணிநேரத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான 2 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. அமெரிக்கா, பிரேசில், இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் 58 ஆயிரத்து 349 பேரும் பிரேசிலில் 25 ஆயிரத்து 364 பேரும் இந்தியாவில் 29 ஆயிரத்து 108 பேரும் தென்னாபிரிக்காவில் 12 ஆயிரத்து 58 பேரும் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ரி1)

## இராணுவ வீரர்களுக்கு கொரோனா



தொடர்புகளைப் பேணியோரை தேடும் பணி தீவிரம்

### கந்தளாயில்...

கொழும்பு, ஜூலை 13

கந்தளாய் அக்போபுர பகுதியைச் சேர்ந்த இராணுவ வீரரொருவருக்கு கொரோனா தொற்றுஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் கடமையாற்றி வந்திருந்தார் என்று கந்தளாய் பிராந்திய வைத்திய அத்தியட்சகர் அலுவலகம் அறிவித்துள்ளது.

அவர் கந்தகாடு இராணுவ நிலையத்தில் கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பை பேணிய நிலையிலேயே கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார் எனவும் சுகாதார வைத்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

குறித்த இராணுவ வீரர் விடுமுறையில் தனது வீட்டுக்குச் சென்ற நிலையிலே காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவ்வேளை அவர் கொரோனா தொற்றுக்குள்ளானது கண்டறியப்பட்டுள்ளது. அவருடன் தொடர்புகளைப் பேணிய, அவர் சென்ற இடங்களைக் கண்டறிந்து தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதுடன் அவரின் மனைவி மற்றும் பிள்ளைகளை தனிமைப்படுத்தி உள்ளோம் என பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (ரி1)

### கண்டியில்...

கண்டி, ஜூலை 13

கண்டி குண்டசாலை பிரதேசத்தில் இராணுவ அதிகாரி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து, அவரது குடும்பத்தினர் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அர்ஜுன திலக்கரட்ண தெரிவித்துள்ளார்.

இந்த இராணுவ அதிகாரி கடந்த 25 ஆம் திகதி விடுமுறையில் வீட்டுக்குச் சென்று அங்கு 11 நாள்கள் தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில், அவரது வீடு அமைந்துள்ள பிரதேசத்தில் அவருடன் பழகிய நபர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் 40 பேர் சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் திலக்கரட்ண மேலும் குறிப்பிட்டுள்ளார்.(ரி2)



## கரையோர ரயில் சேவைகள் பாதிப்பு

கொஸ்கொடை, ஜூலை 13

கொஸ்கொடைப் பகுதியில் ரயில் ஒன்றில் ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறு காரணமாக கரையோர ரயில் சேவைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஹிக்கடுவையில் இருந்து இன்று அதிகாலை 5.25 மணியளவில் கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த அலுவலக ரயில் ஒன்றிலேயே இவ்வாறு தொழிநுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன என ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது. இதன் காரணமாக, காலி மற்றும் மாத்தறையில் இருந்து கொழும்புக் கோட்டை நோக்கிப் பயணிக்கும் மேலும் சில அலுவலக ரயில்கள் தாமதம் அடைந்துள்ளன எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ரி2)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 13.07.2020 இல் வெளியிடப்பெற்றது.